




## No shade tree? Blame not the sun, but yourself.

நிழல் தரும் மரம் இல்லையா?
சூரியனை சபிக்காதீர்கள்,
உங்களையே சலித்துக்
கொள்ளுங்கள்.

# CHEZHUMAI © செழுமை ©

### Land Regeneration – Removing Velikathan

Velikathan is a tough wild plant, which has grown into huge bushes in most of the areas of Tamil Nadu. The situation in some villages in Kanchipuram and Arakonam areas is worser, as Velikathan has spread all over the village. The thorny branches and the heat produced by Velikathan executes all the surrounding trees / plants. The only use with Velikathan is firewood, this is used as firewood in homes and hotels.

### நிலச் சீரமைப்பு - வேலிக்ககாத்தான் நீக்கம்

தமிழகத்தின் எல்லாப்பகுதிகளிலும் வேலிக்காத்தான் நெடு மரங்களாக வளர்ந்துள்ளது. வேலிக்காத்தான் ஒரு காட்டுக்களைச் செடியாகும். காஞ்சீபுரம் மற்றும் அரமொன்னம் கிராமஙகளில் வேலிக்காத்தானின் பாதிப்பு அதிக அளவில் உள்ளது. வேலிக்காத்தானின் முட்கிளைகளும் சூடும் அருகில் உள்ள மற்ற செடி கொடிகளை பெரிதளவில் பாதித்துள்ளது. இந்த செடியின் ஒரே பயன் இதனை விறகாக பயன்படுத்துவதே.

TIST
The International Small Group & Tree Planting Program



TIST **TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org



Now a days people have shifted to use gas for cooking instead of firewood in homes and hotels, because firewood smoke is a serious health hazard, making Velikathan growth in our villages mostly undesirable. Let us uproot the Velikathan and regenerate the land, so that, the human friendly trees like tamarind and neem trees can be grown in those lands. Now it is the dry hot season. There will not be much work in the field. TIST advises every member to make a target, i.e., every member should uproot at least two Velikathan trees. If this works out, just in Chittoor village alone, more than 200 Velikathan trees can be destroyed. More important, do not burn the uprooted Velikathan trees; use them for making barriers for your groves and pole for the Grove Name Boards. One small example, the Salsa Small Group of Mel Kodungular had lost at least 5,000 casuarina seedlings due to the wild weed Velikathan. Once we begin the process of land regeneration by uprooting the Velikathan, the process of putting the land to better use will follow.



Velikathan வேலிக்ககாத்தான்

இன்று மக்கள் சமையல் எரிவாயுவை அதிகம் பயன்படுத்துவதனால் வேலிக்காத்தானால் பெரிதளவு இலாபம் ஏதமில்லை, மேலும், விறகின் புகை சுற்றுச் சூழலிற்கு மாசு என்பதால். அதை விறகாக பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டியுள்ளது. நாம் அனைவரும் சேர்ந்து இந்த வேலிக்காத்தானை நீடீக்கி மக்களுக்கு நலம் தரக்கூடிய புளி மற்றும் வேம்பு போன்ற மரங்களை வளர்க்க வழிவருக்க வேண்டும். இப்பொழுது கோடை காலம், ஆதலால் வயல் வெளிகளில் அதிக அளவு வேலை இருக்காது. அனைத்து உறுப்பினர்களும் குறைந்த பட்சம் இரண்டு வேலிக்காத்தானையாவது நீக்கம் செய்ய வேண்டும் என TIST கேட்டுக் கொள்கிறது. இந்த முறையில் வேலிக்காத்தானை நீக்கினாதல் சித்தூரில் மட்டும் 200 செடிகளையாவது அழிக்கலாம்.

இவ்வாறு வெட்டப்பட்ட அல்லது அறுக்கப்பட்ட வேலிக்காதானை எரிக்காமல் வேறு எதற்காவது (உதாரணத்திற்கு தோப்பில் பெயர்ப்பலகை செய்ய) பயன்படுத்த வேண்டும், வேலிக்காத்தானை தக்கவாறு நீக்கம் செய்யாததால் மேல் கொடுங்கலூரின் சல்சா சிறுக்குழுவிற்கு மட்டும் 5000 சவுக்கு கன்றுகளுக்கு மேல் சேதமாயின. வேலிக்காத்தானை நீக்கி நிலத்தைசீரமைத்தால், நல்ல நேரம் நம்மைத் தேடி வரும்



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Time to Start Nursery

Land regeneration; at the same time as land regeneration TIST Groups can start nurseries. April to July, it is the severe hot and dry time, do not go for purchase of seedlings for planting. The soil is very dry and hot; the tender seedlings cannot withstand the heat. The best job to do now is to start a nursery. Maintain a nursery with minimum 1000 seedlings. Before you start a nursery, call for a meeting with your small group. Discuss about the soil & climatic condition, and mainly availability of water, accordingly select the species. TIST advises the members to select some fruit bearing species, so that there will be good additional earnings, and the trees will also stand for more than 15 years, which is the most important recommendation of TIST.

Do not waste money in buying polythene bags to keep the seedlings. Nandha Small Group of Peruvalayam uses the polythene covers of foodstuffs for keeping the seedlings. One or two small groups of Chittoor had their seedlings in the use and throw cups.

Small Groups Meeting



சிறுக்குழு கூட்டம்



Good arrangement of Seedlings in the nursery



மரக்கன்றுகளை பண்ணையில் வைக்கும் முறை

## பண்ணை தொடங்கும் நேரம்

நிலச் சீரமைப்பு செய்வதோடு மட்டுமில்லாமல், புதிய பண்ணையையும் தொடங்க நாம் முயற்சிக்க வேண்டும். ஏப்ரல் முதல் மே மாதம் வரை கோடை காலம் என்பதால் புதிய மரக்கன்றுகளை வாங்கி பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். நிலம் சூடாகவும். ஈரத்தன்மை குறைவாகவும் இருக்கும் நேரம் இது, ஆதலால் புதிய மரக்கன்றுகள் சூட்டை தாங்க இயலாது. இந்த நேரத்தில் சிறந்த வேலை புதிய பண்ணையை தொடங்குவதே ஆகும், 1000 கன்றுகளுடன் பணணையை பராமரிப்பது மிகவும் இலகுவான வேலையாகும்,

பண்ணையை தொடங்கும் முன் தங்கள் சிறுக்குழுவிற்குள்ளேயே ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து நிலவளம், சீதோசணம் நிலை, நீர் வளம் போன்றவற்றை பற்றி விவாதித்து எந்த வகையான மரக்கன்றுகளை வளர்ககலாம் என முடிவு செய்தல் மிக மிக, அவசியம். பழங்களை தரக் கூடிய மரங்களையும். 15 வருடத்திற்கு வாழக்கூடிய மரங்களையும் தேர்வு செய்ய வேண்டும் என TIST அறிவுறுத்துகிறது,



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

If the seedlings are arranged near the house, the maintenance is relatively easier.



கன்றுகளை பாலீதீன் பைகளில் வைக்க வேண்டும் என்பதற்காக தனியாக செலவு செய்ய வேண்டாம், பெருவளையத்தைச் சேர்ந்த நந்தா சிறுக்குழு உணவு பொருட்களை அடைத்து வைக்க பயன்படுத்தபட்ட பாலிதீன் பைகளையும் உபயோகிக்கின்றனர், ஒரு சில குழுக்கள் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக்கினால் ஆன சிறு டம்ளார்களையும் பயன்படுத்துகின்றனர். வீட்டின் அருகே கன்றுகளை வளர்த்தால், வேலை எளிதாக முடியும். அவை நேரடி பார்வையில் இருப்பதனால் ஆடுமாடுகிளடமிருந்தும் காப்பாற்றப்படும். சமையல் அறையின் கழிவு நீரை கூட உபயோகம் செய்துக் கொள்ளலாம்,

Seedlings can be protected from cattle and direct sunlight. Whatever water is used while cleaning your house, utensils etc. can be diverted to the seedlings.



Good arrangement of Seedlings in the nursery

The seedlings should be kept in the polythene bags till September end. The transplanting can be done in October. October to December is the time for rain and fog; the newly planted trees will grow very fast during that time. The causality level will be very low. Before the next dry season comes, all the transplanted trees will grow well to good strength to withstand the heat.

மரக்கன்றுகள் செப்டம்பர் இறுதி வரை பாலிதீன் பைகளில் வைக்கப்பட வேண்டும். மரம் நடுவது அக்டோபர் மாதத்தில் இருக்க வேண்டும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை மழையும் பனிக்காலமும் ஆகும், புதிய மரங்கள் நன்றாக வளரக்கூடிய காலமிது. பாதிப்புகளும் குறைவாகவே இருக்ககும். அடுத்த கோடைக்குள் மரக்கன்றுகள் நன்றாக வளர்ந்து கோடையை சமாளித்துக் கொள்ளும்,

மரக்கன்றுகளை பண்ணையில் வைக்கும் முறை







**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Added Income for Salsa and Perumal Small Group

There are few small groups like Salsa & Chandiran of Mel Kodungular and Perumal of Marudham who are with TIST for more than two years. These three small groups have more than 1.25 lakhs casuarina trees. These casuarinas trees have grown more than 10 feet in height. The wise act of these three small groups have fetched them more than Rs.30,000/-, this is other than the TIST Voucher Payment. The members have trimmed the side branches of the casuarina trees, so that the tree grows fast upwards. These trimmed branches fetched them considerable amount. Casuarina trees gets only two such payments, but if it is a fruit bearing, the additional earnings will be every year, for instance, Balaji Small Group earns more than Rs.15,000/ - every year from the Cotton trees, which is other than TIST Voucher Payment.



Casuarina tree grove of Perumal Small Group of Marudham after trimming

## சல்சா மற்றும் பெருமாள் சிறுக்குழுக்களின் கூடுதல் வருமானம்

மேல் கொடுங்கலூரின் சல்லா சிறுக்குழு, சந்திரன் சிறுக்குழு மற்றும் மருதத்தின் பெருமாள் சிறுக்குழு போன்றோர் TISTடுடன் இரண்டு வருடத்திற்கும் மேலாக வேலை செய்து வருகிறார்கள். இம்மூன்றுக் குழுக்களிடமும் 1,25 இலட்சத்திற்கு மேற்பட்ட சவுக்கு மரங்கள் உள்ளன. அவை 10 அடி உயரத்திற்கு மேல் வளர்ந்துள்ளன. இவர்களின் அறிவு பூர்வமான செயல்கள் அவர்களுக்கு TIST ன் வவுச்சர் தொகை அல்லாமல் மேலும் ரு.30,000த்தை ஈட்டுத் தந்துள்ளது. சவுக்கு மரங்களின் கிளைகளை அவ்வப்போது வெட்டி மரம் உயரமாக வளர வழி வகுத்தார்கள். அவ்வாறு வெட்டப்பட்ட கிளைகள் இவர்களுக்கு கூடுதல் வருமானத்தை அளித்தது. சவுக்கு மரங்கள் இவ்வாறு வருடத்திற்கு இரண்டு அல்ல முன்று முறையையே ஈட்டுத்தரும். ஆனால் அவையே பழங்களை தரக்கூடிய மரங்களாக இருந்தால் மேலும் வருமானம் கிடைக்கும். பாலாஜி சிறுக்குழுவிற்கு வவுச்சர் தொகை அல்லாமல் ரு.15000த்திற்கும் மேல் வருட வருமானம் உள்ளது. இதற்கு காரணம் அவர்கள் வளர்க்கும் பருத்தி செடிகளே ஆகும்.



பெருமாள் சிறுக்குழுவின் கிளைகள் வெட்டப்பட்ட சவுக்கு மாங்கள்



TIST **TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Grove Name Plate

It is very important to have the name board in every grove. Immediately after the quantification, the TIST quantifier will take a photograph of every grove. While taking the photograph of the grove, group members should position themselves near the grove name board pole, so that, every photograph of the groves will have the image of the group members, name board and of course the trees. The TIST quantifier will be starting the next round quantification during the mid of May 2005, by that time, every small group should have placed the name board in their groves. Name board should have the Name of the Village, Name of Group and Name of the Grove.

Casuarina trees along with conservative farming – Salsa Small Group





ஊடுபயிர்களுடன் சவுக்கு மரங்கள் – சல்சா சிறுக்குழு

## தோப்பின் பெயர்ப் பலகை

ஒவ்வொரு தோப்பிலும் பெயர்ப் பலகை இருத்தல் மிக அவசியம் ஆகும். அளவீட்டிற்கு பிறகு கணக்கீட்டாளர் ஒரு புகைப்படம் எடுத்து ஒவ்வொரு தோப்பின் வளர்ச்சியையும் பதிவு செய்வார். அவ்வாறு புகைப்படம் எடுக்கும் பொழுது, சிறுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பெயர்ப்பலகை அருகே இருக்க வேண்டும். அம மாதத்தின் மையத்தில் கணக்கீட்டாளர் இவ்வாறு பதிவு செய்யத்துவஙகுவர். அப்பொழுது எல்லாச் சிறுக்குபவிலும் கட்டாமாக பெயர்பலகை இருக்க வேண்டும். பெயர்பலகையில் கிராமத்தின் பெயர், குழுவின் பெயர் மற்றும் தோப்பின் பெயர் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.

## Question and Answer

### Answer for Chittoor Small Groups

The main goal of TIST is to renew the status of woodland in Tamil Nadu; no one should cut down even a single tree. TIST is not specific with any particular species; you can grow any tree, but if you select a good species, they will stand as life long asset.

## கேள்வி பதில்

### சித்துார் சிறுக்குழுவிற்க்கான் பதில்

TISTன் முக்கிய நோக்கமே தமிழகத்தின் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே ஆகும். ஒரு மரத்தை கூட யாரும் வெட்டக்கூடாது. மரவகையை பற்றி TIST எந்த ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால் பயனுள்ள மரங்களை வளர்க்க வேண்டும் என அறிவுறுத்துகிறது.



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

You all say that, if you plant species other casuarinas and eucalyptus, the number of trees per acre will be very little and that will affect the voucher amount (earning). TIST says that, there will not be any difference in the yearly earnings if the selection of species is done prudently. Plant trees like, Mango, Guava, Tamarind, Sapota, Cotton, etc. These trees will get a great earning once in a year, which is other the TIST voucher payment. More over, conservative farming is not being followed currently. You can also have short time crops like, chilly, ladies finger, brinjal, etc. in between the trees during the initial stage of the trees, i.e., 6 months to 1 year. Salsa, Chandiran, SindhuKavi small groups followed the conservative farming and they had a great benefit of the conservative farming during the initial stage. If useful trees are planted and conservative farming is followed, there will not be any difference in earnings between the small group which has casuarinas/eucalyptus and the small groups which has fruit bearing trees.



Casuarina trees along with conservation farming – Salsa Small Group

ஊடுபயிர்களுடன் சவுக்கு மரங்கள் சல்சா சிறுக்குழு



நீங்கள் அனைவரும் சவுக்கு மற்றும் மைல மரங்களை தவிர்த்து வேறு மரங்களை வளர்த்தால், ஒரு ஏக்கரில் மரங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் என கருதுகிறீர்கள். ஆதலால் தங்கள் வருமானம் பாதிக்கக்கூடும் என்றும் கூறுகிறீர்கள். முன்யோசனையோடு அல்லது ஜாக்கிரதையாக மரவகைகளை தேர்ந்து எடுப்பதன் முலம் வருட வருமானத்தை கூடுட்டலாம். மா, கொய்யா, புளி, சப்போட்டா, பருத்தி முதலியவற்றை பயிர் செய்வதால் பயன் பெறலாம். ஊடுபயிர் சாகுபடி செய்வதானலும். இலாபம் அடையலாம். மிளகாய், வெண்டை, கத்திரி, போன்ற செடிகளை மரங்களினூடே பயிர் செய்யலாம். சல்சா, சந்திரன் மற்றும் சிந்துக்கவி சிறுக்குழுக்கள் இதுபோல ஊடு பயிர் சாகுபடி செய்து நன்மை அடைந்துள்ளார்கள். பயனுள்ள மரங்களினாலும், ஊடுபயிர் சாகுபடி செய்வதனால் சவுக்கு தைலம் நடவு செய்து பயன்பெறும் அளவை விட அதிகமாகவே பயடையலாம்.

### TIST India

Mr. Prabakar Srinivasan, Project Manager

Mr. A. Joseph, TIST Coordinator and Correspondent

### TIST இந்தியா

திரு. பிரபாகர் ஸ்ரீனிவாசன், திட்ட மேலாளர்.

திரு. அ. ஜோசப், TIST தொகுப்பாளர் / தாளாளா



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

| Schedule for Node Meeting | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Node** | **Villages Covered** | **Group Center** | **Day** | **Session** | **From** | **To** |
| Chamundi | Chamundi,<br>El Endathur,<br>Agili | Mel Kodungalur | 1st Sunday<br>01.05.2005<br>05.06.2005 | Morning | 11:00 AM | 1:00 PM |
| Mel Kodungalur | Singapalli,<br>Ulundhai,<br>Mel Kodungalur,<br>Kattukolli | Mel Kodungalur<br>Kunnavakkam | 1st Tuesday<br>03.05.2005<br>07.06.2005 | Evening | 5:30 PM | 7:30 PM |
| Peruvalayam | Peruvalayam,<br>Melapulam,<br>Mottur | Melapulam | 2nd Saturday<br>14.05.2005<br>11.06.2005 | Morning | 9:00 AM | 11:00 AM |
| Kattiampandal | Kattiampandal,<br>Vellaputur | Kattiampandal | 2nd Sunday<br>08.05.2005<br>12.06.2005 | Morning | 9:00 AM | 12:00 AM |
| Chitoor | KeeraNallur,<br>Chittoor, Molachur,<br>Nandhimedu,<br>Attuputtur,<br>Singadivakkam,<br>Marutham, Jambhodi | Molachur,<br>Marutham,<br>Jambhodi | 3rd Sunday<br>15.05.2005<br>19.06.2005 | Afternoon | 3:00 PM | 5:00 PM |
| Kandoor | Sokandhi,<br>Kandoor | Molachur | 3rd Sunday<br>15.05.2005<br>19.06.2005 | Evening | 6:00 PM | 8:00 PM |
| Aandiseruvallur | Vedal,<br>Aandiseruvallur,<br>Kottavakkam,<br>Melpadavur,<br>Seruvallur,<br>Seruvallur-<br>Mettucolony | Vedal | 4th Saturday<br>28.05.2005<br>25.06.2005 | Afternoon | 3:00 PM | 5:00 PM |

| நோட் கூட்ட அட்டவணை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **நோடு** | **உட்பட்ட கிராமங்கள்** | **நோட் மையம்** | **கிழமை** | **காலம்** | **நேரம்** | |
| | | | | | **முதல்** | **வரை** |
| சாமுண்டி | சாமுண்டி,<br>எல்.எண்டாத்தூர்<br>அகிலி | மேல் கொடுங்கலூர் | முதல் ஞாயிறு<br>01.05.2005<br>05.06.2005 | காலை | 11.00 | 1.00 |
| மேல் கொடுங்கலூர் | சிங்கப்பள்ளி<br>உளுந்தை<br>மேல் கொடுங்கலூர்<br>காட்டுக்கொல்லி, | மேல் கொடுங்கலூர்,<br>குன்னவாக்கம் | முதல் செவ்வாய்<br>03.05.2005<br>07.06.2005 | மாலை | 5.30 | 7.30 |
| பெருவளையம் | பெருவளையம்,<br>மேலாப்புலம்,<br>மோட்டூர் | மேலாப்புலம் | இரண்டாவது சனி<br>14.05.2005<br>11.06.2005 | காலை | 9.00 | 11.00 |
| கட்டியாம்பந்தல் | கட்டியாம்பந்தல்<br>வெள்ளப்புத்தூர் | கட்டியாம்பந்தல் | இரண்டாவது ஞாயிறு<br>08.05.2005<br>12.06.2005 | காலை | 9.00 | 12.00 |
| சித்தூர் | கீராநல்லூர், சித்தூர்,<br>நந்திமேடு, மொளச்சூர்.,<br>ஆட்டுப்புத்தூர்<br>சிங்காடிவாக்கம்,<br>மருதம், ஜம்போதை | மொளச்சூர்<br>மருதம்,<br>ஜம்போதை | மூன்றாவது ஞாயிறு<br>15.05.2005<br>19.06.2005 | மாலை | 3.00 | 5.00 |
| காந்தூர் | சோகண்டி<br>காந்தூர் | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>15.05.2005<br>19.06.2005 | மாலை | 6.00 | 8.00 |
| ஆண்டிச்சிறு வல்லூர் | வேடல்., சிறுவல்லூர்<br>ஆண்டிச்செருவல்லூர்<br>கொட்டவாக்கம்<br>மேல்ப்படவூர்,<br>சிறுவல்லூர்,<br>மேட்டுக்காலனி | வேடல் | நான்காவது சனி<br>28.05.2005<br>25.06.2005 | மாலை | 3.00 | 5.00 |



TIST
**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org